**திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் -2017**

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 5516 எல்கே மற்றும் 5517 எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கைகளின் II.பீ.3 ஆம் பிரிவின் 2 ஆம் பட்டோலையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளை அடிப்படையாகக்கொண்டு திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு மற்றும் ஏனைய அமுல்ப்படுத்தல் முகவர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளை மாத்திரம் இந்த அறிக்கை கொண்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான தனிப்பட்ட அமுல்ப்படுத்தல் முகவர்களின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அறிக்கைகள் தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளது.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்ட அமுல்ப்படுத்தல் ஆவணத்தின் பிரகாரம், திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் ஏனைய 09 நிறுவனங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. எவ்வாறாயினும், அமுல்ப்படுத்தல் முகவராக ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட இலங்கை அச்சீட்டு நிறுவகம் மீளாய்வாண்டின் போது தவிர்க்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்ட அமுல்ப்படுத்தல் ஆவணத்தின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழியர் சந்தை கேள்வியை எதிர்கொள்வதற்கு வினைத்திறனான கல்வி முறைமையை கட்டியெழுப்புதல் மற்றும் தொழிற்பயிற்சி மற்றும் ஆதரவான கொள்கைகள், முறைமைகள் மற்றும் கட்டமைப்புகள் என்பவற்றிற்கான தரம், பொருத்தத்தன்மை, அணுகுதல், இனங்காணுதல் என்பவற்றை மேம்படுத்துதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 125,916 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 961.2 மில்லியனானதுடன் அதில் ரூபா 13,100 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 100 மில்லியன் ஒவ்வொன்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினாலும் ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், ரூபா 5,423 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 41.40 மில்லியன் ஜேர்மனி அரசாங்கம் மற்றும் கொரியா ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி ஆகியவற்றால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக, ரூபா 26,200 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஏனைய மூலங்கள் ஊடாக நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இவ் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இவ் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு

கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு மற்றும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் மற்றும் ஏழு பகுதியளவிலான தன்னாட்சி நிறுவனங்களிற்கான செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன்கள் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன தொழிற்பயிற்சித் துறையின் 08 நிறுவனங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு என்பவற்றின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) நிதியளித்தல் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டு 2018 யூலை 15 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றில் காட்டப்பட்ட தகவல்களானது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைகளுடன் இணக்கம் செய்யப்பட முடியாதிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| **மூலம்** | **மத்திய மட்டத்திற்காக நிதியளித்தல் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை** | | **மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு** | **பயன்படுத்தப்பட்ட நிதிகள்** | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | **மீளாய்வாண்டின் போது** | **2017 திசெம்பர் 31 வரை** | |
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஏடிபீ | 100.0 | 13,100 | | | 87.01 | 12,246 |
| ஐடிஏ | 100.0 | 13,100 | 11,782 | 9,554 | 41.23 | 6,063 |
| இலங்கை அரசாங்கம் | 519.8 | 68,093 | | | 187.70 | 28,691 |
| ஜேர்மனி அரசாங்கம் | 15.4 | 2,017 | - | - | 7.47 | 1,232 |
| கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 26.0 | 3,406 | 500 | 220 | 7.26 | 1,077 |
| ஏனையவை | 200.0 | 26,200 | - | - | - | - |
| **மொத்தம்** | **961.2** | **125,916** | **12,282** | **9,774** | **330.67** | **49,309** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 12,282 மில்லியன் தொகையான பாதீட்டு ஒதுக்கீட்டில், மொத்த ஒதுக்கீட்டின் 79.6 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 9,774 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,754.92 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 49.92 மில்லியன் மீளளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், ரூபா 5,788.07 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 29.62 மில்லியன் மாத்திரமே அத்திகதியிலுள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 09 பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டிகளின் கீழான 73 நடவடிக்கைகளானது கடன் பெறுகைகளைப் பயன்படுத்தி 08 அமுல்ப்படுத்தல் முகவர்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் திறன்கள் துறை அபிவிருத்தி பிரிவு என்பவற்றினூடாக அமுல்ப்படுத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் கடன் பெறுகைகளைப் பயன்படுத்தி அமுல்ப்படுத்தப்பட வேண்டிய 08 பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டிகளின் கீழான 39 நடவடிக்கைகளில் 12 நடவடிக்கைகளின் இலக்குகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்ட அமுல்ப்படுத்தல் ஆவணத்தின் பிரகாரம், நாட்டிலுள்ள தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சிகளின் தரத்தை முன்னேற்றி அங்கீகாரத்தை மேற்கொள்ளுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி விளைவு ஆகும். ஆகையால், தொழிற்பயிற்சி நிறுவனங்களால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட கற்கைநெறிகள் நாட்டில் நடாத்தப்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி நடவடிக்கைகளிற்கான சர்வதேச அங்கீகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக ஒழுங்காக மீளாய்வு செய்யப்பட்டு தேசிய தொழில்சார் தகைமை மட்டம் வரை முன்னேற்றப்பட வேண்டும். அமுல்ப்படுத்தல் முகவர்களால் நடாத்தப்பட்ட 3,719 கற்கைநெறிகளில் 1,454 கற்கைநெறிகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய தொழில்சார் தகைமை மட்டம் வரை சான்றளிக்கப்பட்டிருக்காதமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், பயிற்சி கற்கைநெறிகளை முன்னேற்றும் நோக்கங்களிற்காக மீளாய்வு செய்வதற்கு வரிசை அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்காதமையை இது சுட்டிக்காட்டியிருந்தது.

(இ) தேசிய தொழில்சார் தகைமைகளை எதிர்கொள்வதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்ற தொழிற்பயிற்சி நிறுவனங்களின் தர முகாமைத்துவ முறைமைகளை அபிவிருத்தி செய்து சான்றுறுதிப்படுத்துவதற்காக முன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு பொறுப்பாக உள்ளதுடன் மீளாய்வாண்டிற்காக அவற்றின் மீது ரூபா 02 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றின் மீது பின்வரும் மேலதிக அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற 1,614 தொழிற்பயிற்சி நிறுவனங்களில், மீளாய்வாண்டின் போது தொழிற்பயிற்சி நிறுவனங்களிற்கான தர முகாமைத்துவ முறைமைகள் மீது வழங்கப்பட்ட 74 அத்தகைய சான்றிதழ்கள் உள்ளடங்கலாக 170 சான்றிதழ்கள் மாத்திரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தன.

(ii) தர சான்றுறுதிப்படுத்தல் நோக்கங்களிற்காக தொழிற்பயிற்சி நிறுவனங்களால் பின்பற்றப்பட்ட முறைமைகளை மீளாய்வு செய்வதற்கு வழிகாட்டல் கணக்காய்வாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் உத்தியோகத்தர்களிடையே கடமைகள் சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், 10 வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட வழிகாட்டல் கணக்காய்வாளர்கள் கணக்காய்வு எதனையும் மேற்கொண்டிருக்காத அதேநேரம் ஏனைய உள்வாரியாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட வழிகாட்டல் கணக்காய்வாளர்கள் மீளாய்வாண்டின் போது 27 கணக்காய்வுகள் தொடக்கம் 35 கணக்காய்வுகள் வரையான வீச்சில் கணக்காய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

(ஈ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், இலங்கை கடல்சார் பல்கலைக்கழகம் 07 சான்றிதழ் கற்கைநெறிகளிற்காக 243 மாணவர்களை பதிவுசெய்திருந்த அதேநேரம் மீளாய்வாண்டின் போது 549 மாணவர்களை உட்சேர்ப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. மேலும், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையிலுள்ள இலங்கை கடல்சார் பல்கலைக்கழகத்தின் கற்கை நிலையங்கள் மீளாய்வாண்டின் போது எந்தவொரு டிப்ளோமா மட்ட கற்கைநெறிகளையும் நடாத்தியிருக்கவில்லை.

(உ) நிகழ்ச்சித்திட்ட அமுல்ப்படுத்தல் ஆவணத்தின் பிரகாரம், 2020 அளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிலாளர் சந்தையின் கேள்விகளை எதிர்கொள்வதற்காக

வினைத்திறனான கல்வி முறைமையை கட்டியெழுப்புவதற்கும் தொழிற்பயிற்சி மற்றும் ஆதரவுக் கொள்கைகள், முறைமைகள் மற்றும் கட்டமைப்புக்கள் போன்றவற்றிற்காக தரம், பொருத்தமான தன்மை, நுழைவு மற்றும் அங்கீகாரத்தை முன்னேற்றுவதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. ஆகையால், இளைய தலைமுறைக்கான புதிய வேலை வாய்ப்புக்களை ஆராய்ந்தறிவதற்கு உள்ளூர் மற்றும் சர்வதேச தொழிற்சந்தை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வது அவசியமானதாகும். அவற்றின் மீது பின்வரும் மேலதிக அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தொழிற்பயிற்சியின் 18 துறைகளில் பயிற்சி கற்கைநெறிகளை தொழிற்பயிற்சி அதிகாரசபை நடாத்துவதற்கு தொடர்ந்திருந்த போதிலும் தொழிற்சந்தையின் திறன் இடைவெளிகளை இனங்காண்பதற்கு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆலோசனையுடன் தொழிற்சந்தையின் நிலைமையை ஆராய்ந்தறிவதற்கும் நீண்ட, நடுத்தர மற்றும் குறுகிய கால பயிற்சிக் கற்கைநெறிகளிற்கான இலக்குகளை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் என்பவற்றின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கும் நோக்கத்திற்காக புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை இனங்கண்டு அபிவிருத்தி செய்து அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளதுடன் அவற்றின் மீது ரூபா 3 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை இனங்கண்டு அபிவிருத்திசெய்து அமுல்ப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக கணக்காய்விற்கு சான்றெதுவும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டிற்கான தேசிய இளைஞர் சேவைகள் சபையின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், தொழிற்சந்தைக் கேள்வியை எதிர்கொள்வதற்கு வருடாந்தம் புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களிற்காக மாணவர்களை உட்சேர்ப்பதை அதிகரித்து அமுல்ப்படுத்தப்பட வேண்டிய போதிலும் தேசிய இளைஞர் சேவைகள் சபையின் றிக்கில்லககட மற்றும் தெகியற்றகண்டியவிலுள்ள பயிற்சி நிலையங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) தேசிய இளைஞர் சேவைகள் சபை மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை என்பவற்றின் விபரமான நடவடிக்கைத் திட்டங்களின் பிரகாரம், சலுகையளிக்கப்பட்ட மாணவர்களின் கீழ் 2,100 பேருக்கு உதவி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2014 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியின் போது அவர்களிற்கு நிதி உதவிகளை வழங்குவதற்காக ரூபா 1,144.80 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 வரையிலும் அவற்றின் மீது நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வித்துறையின் வேலைவாய்ப்பு மட்டத்தை அதிகரிப்பதற்கு இயலுமானதாக தனியார் பொது பங்குடமைகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக பொறுப்பாக உள்ளது. மேலும், பொது மற்றும் தனியார் பங்குடமைகள் மீதான உடன்படிக்கையின் கீழ் கல்லூரிகள் உள்ளடங்கலாக பல்கலைக்கழகக் கல்லூரிகளை ஸ்தாபிப்பதற்கும் தேவை நோக்கிய கற்கைநெறிகளை வழங்குவதற்கும் தேசிய தொழில்சார் தகைமை நிகழ்ச்சித்திட்டங்களின் 05 மற்றும் 06 ஆம் மட்டங்களை எதிர்கொள்வதற்கும்

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 07 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது புதிய பல்கலைக்கழக கல்லூரிகளை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் சபை என்பன ரூபா 367.98 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது சிவில் நிர்மாண வேலைகள் மீது 09 ஒப்பந்தங்களை வழங்கியிருந்தன. அதில் 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 05 ஒப்பந்தங்களின் கீழான வேலைகள் ஒப்பந்ததாரர்களின் மனித மற்றும் ஏனைய வளங்களின் பற்றாக்குறைகள் மற்றும் பொதுத் திறைசேரியிடமிருந்து நிதிகளை விடுவிப்பதற்கு காலம் எடுத்தல் போன்றன காரணமாக 2018 யூன் 30 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 295.77 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தொழிற்பயிற்சி அதிகாரசபைக்காக 02 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு 2014 ஆகஸ்ட் 05 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் காணிகளை சுவீகரிப்பதிலுள்ள தாமதங்கள் மற்றும் தீர்மானத்தை அமுல்ப்படுத்துவதற்கான அதிகாரசபை முகாமைத்துவத்தின் சிக்கல்கள் காரணமாக 2017 திசெம்பர் 31 வரையிலும் அவை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அஹன்கமவிலுள்ள ஹோட்டல் பாடசாலையொன்றின் புதுப்பித்தலிற்கான ஆரம்பத் திட்டமானது அதனை மாதிரி ஹோட்டலொன்றாக அபிவிருத்தி செய்வதற்காக பின்னர் மாற்றப்பட்டிருந்ததனால் 2014 ஒக்தோபர் 24 இல் வழங்கப்பட்ட ரூபா 110.35 மில்லியன் தொகையான ஒப்பந்தத்தின் கிரயம் ரூபா 122.75 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், ஹோட்டலிற்கான சமையலறை ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 4.92 மில்லியன் கிரயத்தில் 2017 நவம்பர் 14 இல் தனியான ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. தீர்மானங்களை மாற்றியதன் விளைவாக, ரூபா 10.93 மில்லியன் கிரயத்தில் 2015 மற்றும் 2016 இல் கொள்வனவு செய்யப்பட்ட பயிற்சி உபகரணங்கள் 2018 யூன் 30 வரையிலும் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் மாவட்ட அலுவலகத்தில் விளைவற்றிருந்தது. இதற்கு மேலதிகமாக, ஹோட்டலிற்காக ரூபா 13.52 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம், பொருத்துக்கள் மற்றும் ஹோட்டல் உபகரணங்கள் 2018 யூன் 30 வரையிலும் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்படாததனால் விளைவற்றிருந்தன. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், அதனை ஹோட்டலொன்றாக செயற்படுத்துவதற்கு அதிகாரசபையின் செயற்பாட்டு மற்றும் நிதி இயலளவுகள் போதாமையின் காரணமாக மூன்றாம் தரப்பினரொருவரிற்கு இந்த ஆதனத்தை குத்தகைக்கு வழங்குவதற்கான செயன்முறையில் அதிகாரசபை ஈடுபட்டிருந்தது. மேற்படி தகவல்களை கருத்திற்கொள்ளும் போது அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கான சாத்தியத்தன்மையானது கணக்காய்வில் கேள்விக்குரியதாகவுள்ளது.

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், சமீபத்திய கடந்த காலத்தில் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவின் உயர் பதவியணியினர் விலகல் விகிதம் செயற்திட்டத்தின் செயலாற்றலை மோசமாக பாதித்திருந்தது. செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவின்

பெறுகை நிபுணர்கள், சுற்றாடல் பாதுகாப்பு உத்தியோகத்தர், நிதிப் பகுப்பாய்வாளர் போன்ற பதவிகள் மீளாய்வாண்டு முழுவதும் வெற்றிடமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட 06 பல்கலைக்கழக கல்லூரிகளிற்கான 31 விரிவுரையாளர்கள் மற்றும் 21 செயன்முறையாளர்களை (Demonstrators) ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 02 ஆண்டுகளிற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. மேலும், தேசிய இளைஞர் சேவைகள் சபையின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி பிரிவின் கல்விசார் பதவியணியினரின் 59 பதவிகள் மற்றும் பணிப்பாளர் (பயிற்சி) மற்றும் பிரதிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சி) பதவிகள் என்பவற்றிலுள்ள வெற்றிடங்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கு மேலாக நிரப்பப்படாதிருந்தது.

(இ) வரிசை அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் பிழையான விளக்கத்தை அடிப்படையாகக்கொண்டு தேசிய இளைஞர் சேவைகள் சபை, இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம், தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் கடல்சார் பல்கலைக்கழகம் என்பவற்றின் கல்விசார் பதவியணியினரிற்கு திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயலாற்றல் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய வரன்முறைகளின் கீழ் செயலாற்றலை மதிப்பிடாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 133.29 மில்லியன் தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தின் பதவியணியினரின் இயலளவு அபிவிருத்தி நோக்கங்களிற்காக ரூபா 1 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 03 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 11 போதனாசிரியர்கள் (Instructors) மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது ரூபா 0.29 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(உ) செயற்திட்ட நோக்கங்களின் தேவைப்பாட்டின் பிரகாரம், தொழிற்பயிற்சி அதிகாரசபைக்காக மனித வள அபிவிருத்தி திட்டம் 2017 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அதிகாரசபையின் போதனாசிரியர்களின் தேவைப்பட்ட தகைமைகளுடன் தரவுத் தளம் எதுவும் பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.5 விளைவற்ற/ குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பட்டன்கல பல்கலைக்கழக கல்லூரிக்கு கிடைக்கப்பெற்ற ரூபா 59.53 மில்லியன் பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் ஆய்வுகூடங்களை அமைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதிலுள்ள தாமதங்கள் காரணமாக 03 ஆண்டுகளிற்கு மேலாக விளைவற்றிருந்தது.

(ஆ) செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவின் பதிவேடுகளின் பிரகாரம், 2015 யூலை 02 இல் ரூபா 1.92 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 18 கணனிகள் பட்டன்கல பல்கலைக்கழகக் கல்லூரிக்கு மாற்றப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், உரிய சொத்துக்கள் 2018 மே 31 வரையிலும் பட்டன்கல பல்கலைக்கழகக் கல்லூரியின் மொழி ஆய்வுகூடத்திற்குக் கிடைக்கப்பெற்றிருக்காததுடன் இதனை புலனாய்வு செய்வதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு 2016 ஆம் ஆண்டில் ரூபா 99.57 மில்லியன் கிரயத்தில் 66 உபகரணப் பொருட்களை கொள்வனவு செய்திருந்ததுடன் உற்பத்தி தொழில்நுட்பம் மீது பயிற்சிக் கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்காக இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்திற்கு கையளித்திருந்தது. எவ்வாறாயினும், உரிய பயிற்சிக் கற்கைநெறி 2018 மே வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் உரிய உபகரணங்கள் 2018 மே 29 வரை 1½ ஆண்டுகளிற்கு மேலாக குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும், அத்தகைய அனைத்து உபகரணங்களினதும் உத்தரவாதக் காலப்பகுதி காலாவதியாகியிருந்தது.

### 3.6 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான சர்ச்சைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி அமைச்சு செயலாளரின் 2016 யூன் 10 இன் 02/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்திற்காக உள்ளகக் கணக்காய்வாளரை நியமனம் செய்வதற்கு 2017 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனையல்லாத சேவைகள் என்பவற்றின் பெறுகைக்காக அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 4.2.1 ஆம் பந்தி மற்றும் வழிகாட்டல்களின் 1.18 ஆம் பிரிவு என்பவற்றால் வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 751 இன் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் சொத்துக்களை பதிவுசெய்வதற்கு செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவினால் பொருட்பதிவேடு பேணப்பட்டிருக்காததால் உரிய அமுல்ப்படுத்தல் முகவர்களிற்கு செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவிடமிருந்து மாற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் சரிபார்க்கும் நோக்கங்களிற்காக தயார் நிலையில் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, மீளாய்வாண்டின் போது செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவிற்கு வரிசை அமைச்சிடமிருந்து மாற்றப்பட்ட ரூபா 2.76 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவால் பதிவேடு எதுவும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பட்டன்கல பல்கலைக்கழகக் கல்லூரிக்கு நிகழ்ச்சித்திட்டத்தால் கையளிக்கப்பட்ட 40 இருப்பு பொருட்கள் பல்கலைக்கழகக் கல்லூரியால் பேணப்பட்ட இருப்புப் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.